TAMIL NADU HIGHWAY ENGINEERS NEWS

Price Rs. 10/- (Tamil & English Monthly Magazine) தனிப் பிரதி ரூ. 10/-

ஆண்டு 36	அக்டோபர் 2026	இதழ் 10
Volume 36	OCTOBER 2026	Issue 10

கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

நெடுஞ்சாலைத்துறையில் நிலவி வரும் நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வு காணவும், நமது சங்கத்தின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், **கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 24.09.2026** அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

35v, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015

தொ. பே. எண் : 044 - 2230 0190, தொ. அ. எண். 044 - 2230 0190

website : www.tnhighwaysengineers.com, e-mail : atnhe.chn15@gmail.com

சங்கத்தின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 24.09.2026 அன்று நடைபெற்றது.

சங்கத்தின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 24.09.2026 அன்று நடைபெற்றது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 24.09.2026 அன்று நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள் பத்திரிக்கையாளர் சந்திப்பு நடைபெற்றது.

தலையங்கம்

அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளுக்கு வணக்கம்!

கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் வெற்றி! வெற்றி! வெற்றி!

நமது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி 24.09.2026 அன்று சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், பொறியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உற்சாகத்துடனும் ஒற்றுமையுடனும் பங்கேற்றது மிகுந்த மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அளிக்கிறது.

பல்வேறு சவால்களையும் சூழ்நிலைகளையும் கடந்து, நமது உரிமைகளுக்காகவும், பொறியாளர்களின் கண்ணியத்தைக் காப்பதற்காகவும், பணிச்சூழலை மேம்படுத்துவதற்காகவும் ஒன்றிணைந்து குரல் கொடுத்த அனைத்து பொறியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆர்ப்பாட்டத்தைச் சிறப்பாக நடத்திட அரும்பாடுபட்ட சங்க நிர்வாகிகள், கோட்டப் பொறுப்பாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பங்கேற்ற அனைத்து பொறியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

நமது ஒற்றுமையே நமது பலம்! நமது ஒற்றுமையே நமது வெற்றியின் அடித்தளம்!

இன்றைய நமது ஒன்றுபட்ட செயல்பாடு, எதிர்காலத்தில் நமது நியாயமான கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான நம்பிக்கையையும் புதிய உத்வேகத்தையும் அளித்துள்ளது.

இதே ஒற்றுமையுடன் தொடர்ந்து பயணிப்போம்! நமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஜனநாயக வழியில் ஒன்றிணைந்து செயல்படுவோம்!

ஒற்றுமை ஓங்கட்டும்!

பொறியாளர்களின் கண்ணியம் காக்கப்படட்டும்!

நமது நியாயமான கோரிக்கைகள் வென்றிடட்டும்!

நன்றி! நன்றி! நன்றி!

இரு பொறியாளர்களின் இடைநீக்கத்தை ரத்து செய்ய வலியுறுத்தல் - சங்கம் தொடர்ந்து நடவடிக்கை!

தேசிய நெடுஞ்சாலையில் பணியாற்றும் தூத்துக்குடி உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் களக்காடு உதவிப் பொறியாளர் ஆகிய இரு பொறியாளர்களும் மூன்று மொழிகளில் திசைவழிப் பலகைகள் (Direction Boards) அமைத்ததற்காக இடைநீக்கம் செய்யப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

இரு பொறியாளர்களின் இடைநீக்க ஆணைகளையும் உடனடியாகத் திரும்பப் பெற்று, அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, 07.10.2026 அன்று மாநிலம் தழுவிய அளவில் அனைத்துப் பொறியாளர்களும் கறுப்புப் பட்டை அணிந்து தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட இரு பொறியாளர்களுக்கும் நீதி கிடைக்கவும், அவர்களின் இடைநீக்கத்தை ரத்து செய்து மீண்டும் பணியில் அமர்த்தவும் கோரி, சங்கத்தின் சார்பில் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் முதன்மை இயக்குநர் ஆகியோரிடம் நேரில் வலியுறுத்தப்பட்டது.

மேலும், துறை அமைச்சர் அவர்களிடமும் பாதிக்கப்பட்ட இரு பொறியாளர்களையும் நேரில் அழைத்துச் சென்று, அவர்களின் இடைநீக்கத்தை விரைவில் ரத்து செய்து மீண்டும் பணியில் அமர்த்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொறியாளர்களின் நலன், கண்ணியம் மற்றும் பணிப் பாதுகாப்பைக் காப்பது சங்கத்தின் முக்கியக் கடமையாகும். பாதிக்கப்பட்ட இரு பொறியாளர்களுக்கும் உறுதுணையாக இருந்து, அவர்களுக்கு உரிய நியாயம் கிடைக்கும் வரை சங்கம் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

எனவே, அனைத்து பொறியாளர்களும் எவ்வித வேறுபாடுமின்றி ஒற்றுமையுடன் இருந்து, பாதிக்கப்பட்ட சக பொறியாளர்களின் நலனைப் பாதுகாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம்.

ஒற்றுமையே நமது பலம்!

பொறியாளர்களின் கண்ணியமே நமது முன்னுரிமை!

நியாயம் கிடைக்கும் வரை தொடர்ந்து குரல் கொடுப்போம்!

69-வது ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்திற்கு உறுப்பினர்களை அழைப்பு

நமது சங்கத்தின் 69-வது ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் வரும் 17.10.2026 (சனிக்கிழமை) அன்று மதுரையில் உள்ள ஆர்.ஆர். மஹாலில் நடைபெற உள்ளது.

இப்பொதுக்குழுக் கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு, சங்கத்தின் வளர்ச்சி, பொறியாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் குறித்த விவாதங்களில் பங்கேற்று, கூட்டத்தைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனைவரும் ஒன்றிணைவோம்!

சங்கத்தின் ஒற்றுமையையும் வலிமையையும் உயர்த்துவோம்!

ஒற்றுமையே நமது பலம்!

நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்க! **பொறியாளர் ஒற்றுமை ஓங்குக!**

நகல்:

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்
'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

தலைவர்	பொதுச் செயலாளர்	பொருளாளர்
பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ.,	பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ.,	பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ.,
கைபேசி எண்: 88708 88918	கைபேசி எண்: 97517 04393	கைபேசி எண்: 98436 40475

கடித எண்.456/ 2026, **நாள்: 21.09.2026**

பெறுநர்

1. **மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,**
   பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை,
   (கட்டடம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்)
   புனித ஜார்ஜ் கோட்டை,
   தலைமைச் செயலகம்
   சென்னை - 600009

2. **அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள்,**
   நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   தலைமைச் செயலகம்
   சென்னை - 600009

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: நெடுஞ்சாலைத் துறையில் நிலவி வரும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் பொறியாளர்களின் நீண்டகால கோரிக்கைகள் - தீர்வு காண வலியுறுத்தி 24.09.2026 அன்று நடைபெற உள்ள கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் - கோரிக்கைகள் தொடர்பாக.

வணக்கம்.

நெடுஞ்சாலைத் துறையில் பணிபுரியும் பொறியாளர்கள், மாநிலத்தின் சாலை மற்றும் பாலங்களின் கட்டுமானம், பராமரிப்பு, தரக் கண்காணிப்பு மற்றும் சாலைப் பாதுகாப்பு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும், தற்போது துறையில் நிலவி வரும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, பொறியாளர்கள் தங்களது பணிகளை திறம்பட மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக, துறை மறுசீரமைப்பிற்குப் பின்னர் ஏற்பட்டுள்ள பணிச்சுமை மற்றும் பணியிட சமநிலையின்மை, போதிய மனிதவளம் இல்லாமை, களப்பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் அலுவலக உதவியாளர்கள் பற்றாக்குறை, பராமரிப்புப் பணிகளுக்கான நிதி மற்றும் அவசரகால வசதிகள், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகள், சாலைப் பாதுகாப்பு மற்றும் தரக் கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளன.

மேற்கண்ட பிரச்சினைகள் தொடர்பாக சங்கத்தின் சார்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல்வேறு கட்டங்களில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், திருச்சி, மதுரை மற்றும் கோவை மண்டலங்களில் உள்ள மண்டல தலைமைப் பொறியாளர்களிடம் பெருந்திரள் முறையீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், நெடுஞ்சாலைத் துறையில் நிலவி வரும் நடைமுறைச் சிக்கல்களுக்கு விரைந்து தீர்வு காணவும், பொறியாளர்களின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், தமிழ்நாடு அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில்,

நாள் 24.09.2026 ☸ காலை 10.30 மணி
இடம்: நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகம், சென்னை

என்ற இடத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த சங்கத்தின் சார்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் எந்தவித தனிப்பட்ட நோக்கத்திற்காகவும் அல்லாமல், நெடுஞ்சாலைத் துறையின் செயல்திறனை மேம்படுத்தவும், பொறியாளர்களின் பணிச்சூழலை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை வசதிகளை உறுதி செய்யவும் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் ஜனநாயக ரீதியான நடவடிக்கையாகும்.

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறியாளர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து, சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு, நடைமுறைச் சிக்கல்களுக்கு விரைந்து தீர்வு காணவும், நியாயமான மற்றும் நீண்டகால கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், எங்களது பிரதிநிதிகளை நேரில் சந்தித்து, கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு உரிய வாய்ப்பினை வழங்குமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள,

21.09.2026 21.09.2026 21/09/26

துணைத் தலைவர் பொதுச் செயலாளர் பொருளாளர்

இணைப்பு: கோரிக்கைகள்

நகல்: 1. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, கிண்டி, சென்னை - 25
2. மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் (நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சென்னை, திருச்சி, மதுரை, கோவை

நகல்:

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்
35வி,தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 15

அன்புடையீர்
வணக்கம்,

நெடுஞ்சாலைத்துறையில் நிலவி வரும் நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வு காணவும், நமது சங்கத்தின் நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும், தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில், கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

நாள்: 24.09.2026, காலை 10.30 மணி

இடம்: நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகம், சென்னை

- **நமது கோரிக்கைகளுக்காக ஒன்றிணைவோம் !**
- **ஒற்றுமையை வெளிப்படுத்துவோம் !!**
- **நமது உரிமைகளை வென்றெடுப்போம் !!!**

சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு, இக்கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாகவும் எழுச்சியுடனும் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கோரிக்கைகள்

- ஆறாவது ஊதியக்குழுவின் திரு. ராஜீவ் ரஞ்சன் தலைமையிலான ஒருநபர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியப் பரிந்துரைகளை கீழ்க்கண்டவாறு 7வது ஊதியக்குழுவில் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுகிறோம்:

  உதவிப் பொறியாளர்: ரூ.15,600-39,100 + தர ஊதியம் ரூ.5,400/-
  உதவிக் கோட்டப் பொறியாளர்:ரூ.15,600–39,100 + தர ஊதியம் ரூ.6,600/-
  கோட்டப் பொறியாளர்: ரூ.15,600-39,100 + தர ஊதியம் ரூ.7,600/-

- ஊதிய முரண்பாடுகளைக் களையும் வரை, 04.04.2024 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், உரிய ஆணையை நிதித்துறை வெளியிடாததால் மாத ஊதியத்தில் ரூ.20000/- வரை குறைவாகவும் பதவி உயர்வின் போது உரிய ஊதியமின்றியும் பணி ஓய்வின்போது உரிய பலன்களை பெறாமல் ரூ.12,00,000/- லட்சத்திற்கும் அதிகமாக பிடித்தம் செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணும் வகையில், தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நிதித் துறையை வலியுறுத்த முதன்மை இயக்குனர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

- பொது மாறுதல் (General Transfers) மற்றும் விருப்ப மாறுதல் (Willing Transfers) கோரி விண்ணப்பித்துள்ள பொறியாளர்களின் கோரிக்கைகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதால், அவர்களின் பணித் திறனும் மன அமைதியும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நிலுவையில் உள்ள அனைத்து மாறுதல் விண்ணப்பங்களையும் உடனடியாகப் பரிசீலித்து, எவ்வித காலதாமதமுமின்றி தகுதியான பொறியாளர்களுக்கு மாறுதல் ஆணைகளை (Transfer Orders) விரைந்து வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

- துறையின் பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ளும் வகையில், தொழில்நுட்ப உதவியாளர்கள், கணினி இயக்குநர்கள், ஓட்டுநர்கள், அலுவலகக் காவலர்கள் மற்றும் அலுவலகப் பராமரிப்பாளர்கள் உள்ளிட்ட காலியாகயுள்ள நிரந்தர பணியாளர்கள் மற்றும் அவசியம் மூலமாக தற்காலிகப் பணியாளர்களை உடனடியாக நியமிக்க நடைமுறை சாத்திய கூறுகளை ஆராய்ந்து உரிய வழிகாட்டுதல் வழங்க வேண்டும்

- சாலைகள் மற்றும் பாலங்களை முறையாகப் பராமரிப்பதற்காக, ஒவ்வொரு 8 கி.மீ. சாலைப் பகுதிக்கும் 2 சாலைப் பணியாளர்களும், ஒவ்வொரு 25 கி.மீ. சாலைப் பகுதிக்கும் 1 திறன்மிகு உதவியாளரும் பணியமர்த்தப்பட வேண்டிய விதிகள் நடைமுறையில் உள்ளது. ஆனால், தற்போது பெரும்பாலான இடங்களில் மேற்கண்ட பணியிடங்கள் காலியாக உள்ளதால், பராமரிப்பு பணிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலை கருத்திற் கொண்டு தற்காலிகப் பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை நியமிப்பதற்கான உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதிக்கான ஆணை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திற்கும் (Section) பருவமழையை எதிர்கொள்வதற்கும், ஏற்படும் அவசரகாலச் சூழ்நிலைகளை உடனடியாகவும் திறம்படவும் கையாள்வதற்கும் தேவையான அத்தியாவசியப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் போதிய எண்ணிக்கையிலான தொழிலாளர்களை முன்கூட்டியே ஏற்பாடு செய்து வழங்கிட வேண்டும்.

- பருவமழைக்குப் பின்னர் சாலைகளில் ஏற்படும் பள்ளங்களை (Potholes) போர்க்கால அடிப்படையில் உடனடியாகச் சீரமைத்து, மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றார்போல் சாலைகளைப் போக்குவரத்துக்கு உகந்த நிலையில் விபத்து ஏற்படாதவாறு பராமரிப்பதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் போதிய நிதி ஒதுக்கீட்டினை முன்கூட்டியே உறுதி செய்ய வழிகாட்டுதல்கள் வேண்டும்.

- சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்புப் பணிகள் மற்றும் அலுவலகங்களின் அன்றாடச் செலவினங்களை மேற்கொள்ள, போதுமான Petty Cash / Contingent Expenses நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் தொய்வின்றி நடைபெற உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- உதவிப் பொறியாளர்களுக்கு வழங்கப்படும் நிரந்தர முன் பண கணக்கு (Permanent Imprest) நிதி வரம்பை ரூ.500/- இலிருந்து ரூ5,000/-ஆகவும் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு வழங்கப்படும் நிரந்தர முன் பண கணக்கு (Permanent Imprest) நிதி வரம்பை ரூ.1,000/- இலிருந்து ரூ.10,000/- ஆக தற்போதைய விலைவாசி காரணமாக உயர்த்தி, பணிகளைச் சீராகவும், அவசரத் தேவைகளுக்கு உடனடியாகவும் மேற்கொள்ளும் வகையில், அதற்கான அரசாணையை வழங்கிட வேண்டுகிறோம்

- எந்தவொரு உற்பத்திச் செயல்முறையிலும் இருப்பதைப் போலவே, சாலை கட்டுமானப் பணிகளிலும் மாறுபாடு (Variability) என்பது தவிர்க்க முடியாத இயல்பான நிகழ்வாகும். (IRC:SP-112:2017) சாலை கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களும் கட்டுமானச் செயல்முறைகளும் இயல்பிலேயே பன்முகத்தன்மை (heterogeneity) கொண்டிருப்பதால், அருகருகிலுள்ள இடங்களில் எடுக்கப்படும் மாதிரிகளில்கூட வெவ்வேறு சோதனை முடிவுகள் கிடைக்கக்கூடும். எனவே, ஆய்வுகளின்போது இத்தகைய இயற்கையான மாறுபாடுகளை கருத்தில் கொண்டு, அவை நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க வரம்புகளுக்குள் உள்ளதா என்பதை அறிவியல் மற்றும் புள்ளியியல் பகுப்பாய்வு அடிப்படையில் மதிப்பிடுவது அவசியமாகும். இதற்காக, பொறியாளர் குழுமமும் (Board of Engineers), நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமும் (HRS) இணைந்து, பல்வேறு கால மற்றும் இடச் சூழல்களுக்கு ஏற்ப சாலை கட்டுமானப் பணிகளுக்கான அறிவியல் பூர்வமான மற்றும் தொழில்நுட்ப ரீதியாக நியாயமான ஏற்றுக்கொள்ளத்தக்க தர வரம்புகளை (Acceptance Limits) உருவாக்கி நிர்ணயித்து வழங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- 2012 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த தகுதியான உதவிப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள 3:1 விகிதாச்சார விதிகளின் அடிப்படையில் உதவிக் கோட்டப் பொறியாளர் (Assistant Divisional Engineer) பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

- 10 ஆண்டுகளுக்கு மேலாக உதவிப் பொறியாளர்களாகவும் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்களாகவும் பணிபுரிந்து வரும் பொறியாளர்களுக்கு அப்பதவிகளில் தேர்வு நிலை (Selection Grade) வழங்கப்படாமல் நீண்ட

காலமாக நிலுவையில் உள்ளது. அதற்கு தகுந்த தீர்வு காண முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

- புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அலுவலகங்களுக்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், நிதி ஒதுக்கீடு செய்தல், முதுநிலை வரைவு அலுவலர் மற்றும் கண்காணிப்பாளர் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

- துறை மறுசீரமைப்பினால் (Departmental Reorganisation) ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள், குறைபாடுகள் மற்றும் சிரமங்களை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று அவற்றிற்கு தகுந்த தீர்வு காண முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் -II (TNRSP-II)அலகினை ஒப்படைப்பு செய்வதாக தெரிய வருகிறது. அதில் பணியாற்றும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களை துறை விரிவாக்கத்திற்கு மறுபணியமர்வு (redeployment) செய்து ஆணை வெளியிட அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

- புதிதாக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் (TANSHA) தேவையான பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் பணியிடங்களில் தற்பொழுது நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களை அயற்பணி மூலமாக பணியமர்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- நெடுஞ்சாலைத்துறையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் பணிபுரியும் உதவிப் பொறியாளர்களுக்கு தற்பொழுது நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி தள ஆய்வு செய்ய போதுமானதாக இல்லை என்பதால் பிற அலகுகளில் உள்ளது போன்று பயணப்படி உயர்த்தி வழங்கவும், வட்ட அலுவலகம் மற்றும் தலைமைப் பொறியாளர் அலுவலகம் செல்வதற்கு அதிகார எல்லைக்கு வெளியே (outside jurisdiction) வழங்கும் பயணப்படியை சேர்த்து வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

- நெடுஞ்சாலைத் துறையில் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் முதல் தலைமைப் பொறியாளர்கள் வரை பல்வேறு நிலைகளில் பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்கள் அன்றாடம் மேற்கொள்ளப்படும் சாலைப் பணிகள், பராமரிப்புப் பணிகள் மற்றும் இதர களப்பணிகளை நேரடியாகச்

சென்று ஆய்வு செய்து, மேற்பார்வையிட்டு வருகின்றனர். குறிப்பாக, உதவிக் கோட்டப் பொறியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பணிப்பரப்பு சில நேரங்களில் 4 மாவட்டங்கள் வரை விரிவடைந்துள்ளதால், அரசு வாகனங்களைப் பயன்படுத்தி அதிக அளவில் களப்பணிகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, பொறியாளர்களின் களப்பணிகளைத் தடையின்றி மேற்கொள்ளும் வகையில், அரசு வாகனங்களுக்கான தற்போதைய 70 லிட்டர் டீசல் ஒதுக்கீட்டை குறைந்தபட்சம் 200 லிட்டராக உயர்த்தி வழங்கிட உரிய அரசு ஆணை/ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- சாலை மற்றும் பாலப்பணிகள் நடைபெறும் பொழுது சாலை உபயோகிப்போர் பாதுகாப்பிற்கு முழு பொறுப்பு ஒப்பந்ததாரர்களையே சாரும். எனினும், பல்வேறு நிகழ்வுகளில் ஒப்பந்த விதிகளுக்கு முரணாக பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை வருத்ததுடன் பதிவிடுகிறோம். ஒப்பந்தப் பணிகளுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களை ஒப்பந்தக்காரர்களே ஏற்பாடு செய்து பொதுமக்கள் பாதுகாப்பினையும் சாலை பாதுகாப்பினையும் உறுதி செய்ய வேண்டும். இது தொடர்பாக பொறியாளர்கள் குழு (Board of Engineers) கூட்டத்தில் விவாதித்து, உரிய முடிவு எடுக்க முதன்மை இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

- நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் அரசு ஆணை எண்: 71, நாள்: 07.08.2026-ன்படி, நெடுஞ்சாலைத் துறையின் அன்றாட செயல்பாடுகள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்களுக்கு வெளியிடுவதற்காக, நெடுஞ்சாலைத் துறைக்கான அதிகாரப்பூர்வ Instagram கணக்கு உருவாக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், களப்பணியில் ஈடுபட்டுள்ள பொறியாளர்கள் ஏற்கனவே பணிச்சுமை மிகுந்த சூழலில் பணியாற்றி வருகின்றனர். மேலும், சமூக வலைத்தளங்களில் பதிவுகளைத் தயாரித்தல், பதிவேற்றம் செய்தல் மற்றும் அவற்றைத் தொடர்ந்து பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு தேவையான கூடுதல் நேரமும், தகவல் தொடர்பு வசதிகளும் போதுமான அளவில் இல்லை. எனவே, களப்பணியாளர்களின் கூடுதல் பணிச்சுமையை கருத்தில் கொண்டு மேற்கண்ட அரசாணையை திரும்பப் பெறுமாறும், இப்பணிகளுக்கென உரிய அலுவலர்கள்/தனிப்பட்ட குழுவினரை நியமித்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- இயற்கைப் பேரிடர், கனமழை, வெள்ளம், சாலை அல்லது போக்குவரத்து துண்டிப்பு உள்ளிட்ட அவசரகால சூழ்நிலைகளில், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதியை உறுதி செய்யும் வகையில், 24×7 அடிப்படையில் பணியாற்ற அனைத்து பொறியாளர்களும் தயாராகவும்,

முழுமையாக அர்ப்பணிப்புடனும் உள்ளோம். எனினும், வழக்கமான நிர்வாகப் பணிகள், ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கள ஆய்வுகள் போன்றவற்றை இயன்றவரை இரவு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் நடத்துவதைத் தவிர்த்து, வார வேலை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட பணி நேரத்திற்குள் மேற்கொள்ளும் வகையில் உரிய வழிகாட்டுதல்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- நெடுஞ்சாலைத்துறையின் தற்போதைய நிர்வாக மற்றும் களப்பணிச் சூழலுக்கு ஏற்ப, Highways Volume–IV-ல் உதவிப் பொறியாளர்கள் மற்றும் பிரிவு அலுவலகங்களின் பணிப்பொறுப்புகள், அதிகார வரம்புகள் மற்றும் பணி நேரம் தொடர்பான விதிமுறைகளைத் தெளிவாக வரையறுத்து, தற்போதைய நடைமுறைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப உரிய திருத்தங்களை மேற்கொண்டு, புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதல்களை வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- புதிதாக உருவாக்கப்பட்ட ஒவ்வொரு வட்டத்திற்கும் கூடுதலாக ஒரு மண்டல ஆய்வகத்தை (Regional Laboratory) அமைக்க வேண்டும். ஒவ்வொரு மண்டல ஆய்வகத்திற்கும் 2 கள உதவியாளர் (Field Assistant) பணியிடங்களும், 1 ஆய்வக உதவியாளர் (Laboratory Assistant) பணியிடமும் ஏற்படுத்தப்பட்டு, அவை உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

- பெருகி வரும் சாலை விபத்துகளைக் குறைப்பதற்கும், சாலைகளின் தரத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விபத்தில்லா சாலைகளை உருவாக்குவதற்கும், ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு உட்கோட்டம் என்ற விகிதத்தில் புதிய சாலைப் பாதுகாப்பு அலகுகளை உருவாக்கி, அதற்கான அரசாணையை உடனடியாக வெளியிட பரிந்துரை செய்ய வேண்டும்.

பொறிஞர் சோ.பாண்டியன் **துணைத் தலைவர்**	**பொறிஞர் ப. வீரமணி** **பொது செயலாளர்**	**பொறிஞர் சொ.தியாகராஜா** **பொருளாளர்**

நகல்:

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

தலைவர்	பொதுச் செயலாளர்	பொருளாளர்
பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ.,	பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ.,	பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ.,
கைபேசி எண்: 88708 88918	கைபேசி எண்: 97517 04393	கைபேசி எண்: 98436 40475

கடித எண்.460/2026 **நாள் 02.10.2026**

பெறுநர்:

முதன்மை இயக்குநர் அவர்கள்,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி,
சென்னை - 600025.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: **நெடுஞ்சாலைத்துறை - பொறிஞர் N. பூமிநாதன், உதவிக் கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை உட்கோட்டம், தூத்துக்குடி மற்றும் பொறிஞர் T. முத்துலட்சுமி, உதவிப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு களக்காடு - பணியிடைநீக்கம் - சங்கத்தின் சார்பில் பிரதிநிதித்துவம் - பணியிடைநீக்க உத்தரவுகளை மறுபரிசீலனை செய்து ரத்து செய்து மீண்டும் பணியில் அமர்த்தக் கோருதல் - தொடர்பாக.**

பார்வை:

1. **நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநரின் நடவடிக்கை ஆணை எண்.4226/Con3(1)/2026-1, நாள் 01.10.2026 -பொறிஞர் N. பூமிநாதன், உதவிக் கோட்டப் பொறியாளர்.**
2. **நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநரின் நடவடிக்கை ஆணை எண்.4226/Con3(1)/2026-2, நாள் 01.10.2026 - பொறிஞர் T. முத்துலட்சுமி, உதவிப் பொறியாளர்.**

மேற்கண்ட பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை ஆணைகளின்படி, பொறிஞர் N. பூமிநாதன், உதவிக் கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை உட்கோட்டம், தூத்துக்குடி மற்றும் பொறிஞர் T. முத்துலட்சுமி, உதவிப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு, களக்காடு ஆகிய இரு பொறியாளர்களும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் விதி 17(e)-ன் கீழ் உடனடியாகப் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியாளர்கள் சங்கத்தின் சார்பில் இப்பிரதிநிதித்துவத்தை பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

இரு பொறியாளர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை இரவு பகலும் மற்றும் விடுமுறை நாட்கள் என்று பாராமல் அரசின் விதிமுறைகள், நடைமுறைகள் மற்றும் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு மேற்கொண்டு வரும் பொறியாளர்கள் ஆவர். அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதாக பணியிடைநீக்க ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒழுங்கு நடவடிக்கை அல்லது துறை ரீதியான விசாரணை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பின், நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி உரிய விசாரணையை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட பொறியாளர்களுக்கு தங்களது நிலைப்பாட்டை விளக்குவதற்கும், தேவையான ஆவணங்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கும் உரிய வாய்ப்பு வழங்கலாம்.

அதேவேளையில், பணியிடைநீக்கம் என்பது பொறியாளர்களின் பணிச் சேவை மற்றும் குடும்ப வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கடுமையான நிர்வாக நடவடிக்கையாகும். எனவே, தற்போதைய சூழ்நிலையில் பணியிடைநீக்கத்தைத் தொடர்ந்து அமலில் வைத்திருப்பது அவசியமா என்பதையும், அவர்களை பணியில் தொடர அனுமதிப்பது தொடர்பாக உரிய முறையில் மறுபரிசீலனை செய்ய வேண்டுமெனவும் சங்கத்தின் சார்பில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இரு பொறியாளர்களும் துறை சார்பில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணைக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளனர். துறை நிர்ணயிக்கும் அனைத்து சட்டபூர்வமான நிபந்தனைகளையும் கடைப்பிடிப்பதுடன், விசாரணை அல்லது ஒழுங்கு நடவடிக்கையில் எந்தவித இடையூறும் ஏற்படுத்தமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மேற்கண்ட அனைத்து சூழ்நிலைகளையும் கனிவுடன் பரிசீலித்து, பொறிஞர் N. பூமிநாதன், உதவிக் கோட்டப் பொறியாளர் மற்றும் பொறிஞர் T.முத்துலட்சுமி, உதவிப் பொறியாளர் ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட பணியிடைநீக்க உத்தரவுகளை மறுபரிசீலனை செய்து, அவற்றை ரத்து செய்து, இருவரையும் மீண்டும் பணியில் அமர்த்திட உரிய ஆணைகளைப் பிறப்பிக்குமாறு தமிழ்நாடு நெடுஞ்சாலைப் பொறியாளர்கள் சங்கத்தின் சார்பில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விவகாரத்தில் சங்கத்தின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து தங்களிடம் விளக்கமளிக்க உரிய வாய்ப்பு வழங்குமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.,

தங்கள் உண்மையுள்ள,

2/10/2026

பொதுச் செயலாளர்

நகல்:

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

(அரசாணை (நிலை) எண் 1814. பொது (பணிகள்) துறை, நாள் 21.05.1956-ல் ஏற்பு பெற்றது)
'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

தலைவர்	பொதுச் செயலாளர்	பொருளாளர்
பொறிஞர் சே.இராமநாதன், பி.இ.,	பொறிஞர் ப.வீரமணி, எம்.இ., எம்.பி.ஏ.,	பொறிஞர் சொ.தியாகராஜா, எம்.இ.,
கைபேசி எண்: 88708 88918	கைபேசி எண்: 97517 04393	கைபேசி எண்: 98436 40475

கடித எண்.459/2026 நாள் 24.09.2026

பெறுநர்

முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை
சென்னை - 600 025.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: குடும்பச் சூழ்நிலை காரணமாக விருப்பப் பணிமாறுதல் (Willing Transfer) கோரி விண்ணப்பித்துள்ள பொறியாளர்கள் - நிலுவையில் உள்ள விண்ணப்பங்களைப் பரிசீலித்து பணிமாறுதல் ஆணைகள் வழங்குதல் - கோரிக்கை.

குடும்பச் சூழ்நிலை மற்றும் தவிர்க்க முடியாத தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையில், தங்களுக்கு ஏற்ற பணியிடத்திற்கு விருப்பப் பணிமாறுதல் (Willing Transfer) கோரி பல பொறியாளர்கள் உரிய முறையில் விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்து நீண்ட காலமாகியும், பல விண்ணப்பங்கள் இதுவரை நிலுவையில் உள்ளதால், சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் குடும்ப ரீதியாகவும், பணிச்சூழல் ரீதியாகவும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக அவர்களின் மன அமைதியும், பணிகளில் முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படும் நிலையும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, நிலுவையில் உள்ள அனைத்து விருப்பப் பணிமாறுதல் விண்ணப்பங்களையும் உடனடியாகப் பரிசீலித்து, தகுதி மற்றும் நடைமுறைகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கத்தக்க விண்ணப்பங்களுக்கு எவ்வித காலதாமதமுமின்றி பணிமாறுதல் ஆணைகள் (Transfer Orders) விரைந்து வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சங்கத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இத்தகைய நடவடிக்கை, சம்பந்தப்பட்ட பொறியாளர்களின் குடும்பச் சூழ்நிலைகளுக்கு தேவையான நிவாரணத்தை வழங்குவதுடன், அவர்கள் மனநிம்மதியுடன் தங்களது பணிகளில் முழு ஈடுபாட்டுடன் செயல்படவும் உதவும்.

நன்றி.

தங்கள் உண்மையுள்ள

ப.வீ 24.9.26

பொதுச் செயலாளர்

இணைப்பு: விருப்பப் பணிமாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள பொறியாளர்களின் பெயர் பட்டியல்.

Copy of:

Association of Tamil Nadu Highway Engineers

Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956
'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015
Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
www.tnhighwaysengineers.com

President	General Secretary	Treasurer
Er.S.RAMANATHAN, B.E.,	**Er.P.VEERAMANI,** M.E., M.B.A.,	**Er.S.THIYAGARAJA,** M.E.,
Mobile No.: 88708 88918	Mobile No.: 97517 04393	Mobile No.: 98436 40475

Letter No.458/ATNHE/2026, **Dated 24.09.2026**

To

The Principal Secretary to Government,
Highways and Minor Ports Department,
Secretariat,
Chennai – 600 009.

Respected Sir,

Sub: Association of Tamilnadu Highways Engineer- Comprehensive Reforms and Resolution of Long-Pending Professional, Administrative, Financial and Service-Related Issues Affecting Field Engineers in the Highways Department – Request for Necessary Action – Regarding.

We wish to state that the Association of Tamil Nadu Highway Engineers (ATNHE), recognised by the Government of Tamil Nadu, represents approximately 1,800 Engineers serving in the Highways Department, from the cadre of Assistant Engineer to Chief Engineer. On behalf of the Association, we respectfully submit this representation highlighting various long-pending professional, administrative, financial and service-related issues affecting Assistant Engineers and the effective functioning of the Department.

We submit this representation with the firm belief that the present Government, committed to systemic reforms and people-centric policies in a new era of development, will give due consideration to the legitimate concerns of its Departments and personnel and take appropriate measures to address them.

In alignment with the policies and development-oriented initiatives of the Government, we have always remained committed to extending our fullest cooperation and support, with dedication and devotion, towards the effective implementation of its policies and schemes.

For several years, these issues have remained unresolved due to the prevailing political and administrative circumstances. Despite the difficulties faced by Engineers, the circumstances at the time did not provide adequate opportunities to undertake the fundamental reforms necessary to address the structural deficiencies in the existing system. Consequently, several outdated practices, inadequate manpower arrangements, financial constraints and administrative difficulties have continued for many years.

We, as Engineers, believe that the Department should not revert to outdated practices or continue with systems that do not adequately ensure accountability or respond effectively to the changing requirements of a modern Highways Department. At the same time, we acknowledge that the present Government's reform-oriented approach provides a renewed opportunity to address these long-standing issues in a comprehensive and sustainable manner.

We therefore respectfully request the Government to utilise this opportunity to implement permanent and comprehensive reforms rather than temporary or piecemeal measures. The objective should be to establish a modern, accountable, technically sound and professionally structured Highways Department, supported by adequate manpower, infrastructure, financial resources, facilities, clearly defined responsibilities and appropriate service conditions for Engineers.

We firmly believe that such comprehensive reforms will not only address the legitimate concerns of Engineers but will also significantly strengthen the efficiency, accountability and overall functioning of the Highways Department, thereby enabling it to effectively meet the growing infrastructure and public-service requirements of the State., several outdated practices, inadequate staffing arrangements, financial limitations and administrative difficulties have continued for years.

CHARTER OF DEMANDS

1. **Pay Anomaly:** Rectification of the long-pending pay anomaly affecting Engineers.
2. **Work–Life Balance**: Ensure defined working arrangements, timely allocation of work, appropriate arrangements for duties beyond working hours and on holidays, and timely sanction of eligible leave, while safeguarding the personal and family time of employees.
3. **Technical Assistants:** Provide two Diploma-qualified Technical Assistants for every Assistant Engineer.

4. **Computer Operators:** Provide one Computer Operator for every Assistant Engineer.
5. **Road Inspectors and Gang Mazdoors:** Provide one Road Inspector for every 25 km of road and two Gang Mazdoors for every 8 km, as prescribed in the Highways Manual.
6. **Quality Control Laboratory Support and Infrastructure:** Provide adequate Field Assistants, Lab Assistants and Gang Mazdoors and ensure proper laboratory infrastructure in all Quality Control Subdivisions, particularly newly formed Subdivisions and those without separate laboratory facilities.
7. **Travel Allowance and Official Vehicles:** Revise Travelling Allowance suitably to meet actual official field-travel requirements and provide departmental vehicles or an effective vehicle-hiring mechanism for Assistant Engineers undertaking extensive field duties.
8. **Fuel Allocation:** Increase the monthly fuel allocation for departmental Jeeps from the existing 90/110 litres to a minimum of 200 litres, in line with the fuel allocation provided for externally aided projects within the Highways Department.
9. **Office Maintenance Fund:** Provide an adequate Office Maintenance Fund for every Assistant Engineer's office under 3054-80-001-AE-305-02 – Office Expenses – Other Contingencies.
10. **Building Maintenance Fund:** Provide an adequate Building Maintenance and Repair Fund under 2059-80-053.
11. **Revolving Fund:** Provide an adequate 5054-80-004-AA Revolving Fund (Investigation and Estimation) for preliminary field investigations.
12. **Road Maintenance:** Expedite the full implementation of Short term maintenance contract (STMC)for road maintenance, as assured by the Hon'ble Minister during the current Assembly Session.
13. **Administrative Burden:** Reduce unnecessary administrative, transfer, office-rental, Confidential Report (CR), Selection Grade and retrospective-work-related burdens on Assistant Engineers.
14. **Contract Agreement Reforms:** Strengthen contract provisions relating to contractor responsibility for defects during the Defect Liability Period, road safety and accident responsibilities as per SSRB, reduced-pay-factor provisions with clearly defined acceptance criteria in accordance with IRC:SP:112-2017, and expedite implementation of the PMIS-based RFI system for proper documentation, quality control and accountability.
15. **Acceptance Limits for Road Works:** Recognise the natural variability inherent in road construction and establish scientifically and statistically justified Acceptance Limits, taking into account variations in materials,

location and time, in consultation with the Board of Engineers and Highway Research Station (HRS).

16. **Namma Salai App**: Provide a dedicated Ready Fund/Petty Maintenance Fund for timely rectification and closure of Namma Salai App complaints within the prescribed period.
17. **Permanent Imprest:** Reinstate and Enhance the Permanent Imprest for Highways Engineers suitably, considering that the PWD Department has already enhanced the same to ₹5,000 for Assistant Engineers and ₹10,000 for Assistant Executive Engineers.
18. **Revision of Highways Manual (Volume I to IV) and Definition of the Role of Assistant Engineers:** Comprehensively revise the TN Highways Manual by updating its outdated monetary and financial limits and clearly incorporating the present-day role, powers, duties, responsibilities and accountability of Assistant Engineers.

1. PAY ANOMALY – REQUEST FOR EARLY RESOLUTION

It is respectfully submitted that the long-pending pay anomaly affecting Engineers has continued since the implementation of the Sixth Pay Commission.

The OMC-2009 had recommended the pay scale of ₹15,600–39,100 + Grade Pay ₹5,400 for Assistant Engineers, which was subsequently reduced by the Government.

The Hon'ble Madras High Court, in its judgment dated 04.04.2024 in W.P.(MD) No.17163 of 2020, set aside the PGRC-2019 report and the consequential Government Orders and directed fresh consideration of the matter.

In view of the continuing financial impact on Engineers and the resulting disparity in pay among Assistant Engineers, it is respectfully requested that the pay anomaly may be rectified by implementing the OMC-2009 recommended pay scale of ₹15,600–39,100 + Grade Pay ₹5,400, or by implementing the directions of the Hon'ble High Court dated 04.04.2024 in their true letter and spirit, without further delay.

It is further requested that the Government may consider resolving the matter expeditiously so that the long-pending issue does not remain unresolved for an extended period.

A comparative statement indicating the remuneration of Assistant Engineers in other States is enclosed for consideration. The relevant advertisements and supporting materials are also enclosed along with this representation.

Comparison of Debt to GSDP Ratios Across States

S.No	State	Basic Pay	Recruitment Year	Advertisement Notification	GSDP (2024-'25)	Latest Debt-to-GSDP Ratio (%) (Approx- Excluding Board & Corporation Liabilities)
1	Maharashtra	58,560 (GP 5400)	2025	Employment Advertisement No.18/2024	1	**18.4**
2	Tamil Nadu	37700 (GP 5100)	2023	Advertisement No. 672	2	26.1
3	Uttar Pradesh	56,100 (GP 5400)	Dec 17, 2024	Advertisement No.-A-9/E-1/2024	3	31.2
4	West Bengal	56,100 (GP 5400)	2025	Avertisement No.-09 of 2025	5	38
5	Rajasthan	56,100 (GP 5400)	2018-2019	Advertisement No.RVUN/PA/Rectt./03/2018	7	34.8
6	Madhya Pradesh	56,100 (GP 5400)	Feb 10, 2025	No.F-UVN/2024/EST-02-268/32	10	30.9
7	Bihar	56,100 (GP 5400)	2025	Advertisement No: 29/2025	14	37
8	Assam	56,100 (GP 5400)	2017	Advertisement No: 2/2017	17	27.5
9	Chhattisgarh	56,100 (GP 5400)	2021	Advt. No. 05/2021 dt. 11.08.2021	18	**21**
10	Uttarkhand	56,100 (GP 5400)	2021	Advertisement No.UPCL/2021/Rectt.-01	20	**23**
11	Himachal Pradesh	56,100 (GP 5400)	Nov 17,2023	Advt.No.26/11-2023	22	40.5
12	Nagaland	56,100 (GP 5400)	Feb 17, 2021	NO.NPSC/ADVT-1/04	30	47.8
13	Arunachal Pradesh	56,100 (GP 5400)	May 9, 2025	No.APPSC/1/2025	31	45.9
14	Mizoram	56,100 (GP 5400)	2021	No.A.12018/33/2003-PAR(GSW)	32	38.8

2. ENSURING WORK–LIFE BALANCE FOR ENGINEERS

Engineers are primarily field/site officers with major responsibilities relating to site inspection, supervision, measurement, quality control, execution and routine maintenance. Their working arrangements should therefore provide adequate time for field duties while also ensuring reasonable work–life balance.

Working Hours and Workload

- Official details, reports and assignments should, as far as practicable, be communicated with sufficient lead time so that routine work can be completed within prescribed working hours.
- Details are sometimes sought after 6.00 p.m., and communications issued on Friday evenings with Monday deadlines may compel Assistant Engineers to work on Saturdays and Sundays. Routine work beyond office hours, during weekends, Government holidays or sanctioned leave should be avoided except in emergency and unavoidable circumstances.
- Government/public holidays are frequently utilised for departmental inspections, official works and field duties, reducing the time available for personal and family commitments.
- Where urgent work is required beyond office hours, the necessary ministerial staff, drafting personnel and computer operators should also be made available. This would ensure that urgently prepared data and reports are accurate and properly authenticated.
- Departmental meetings should be conducted through Video Conference (VC) wherever physical presence is not essential, thereby reducing unnecessary travel and preserving field and technical working time.
- Where an Assistant Engineer is entrusted with additional charge of another section, the applicable additional-charge allowance should be sanctioned appropriately in view of the additional workload and responsibility.

Leave and Personal Responsibilities

Government employees have essential family and personal responsibilities, including childbirth in the family, death of close relatives, medical appointments and treatment, care of children and elderly parents/dependants, household requirements and other unavoidable personal circumstances.

The various leave provisions available to Government employees are rule-based service benefits intended to address such personal, family and medical requirements. Therefore:

- Eligible leave should be considered and sanctioned in accordance with the applicable rules and within a reasonable time.
- Unnecessary delay or rejection should be avoided, and applying for eligible leave should not itself be viewed adversely.

- ❖ During medical emergencies, family requirements and other unavoidable circumstances, employees should be practically enabled to utilise their eligible leave.
- ❖ Administrative requirements and workload may be considered while processing leave; however, they should not unnecessarily prevent employees from availing leave to which they are otherwise entitled.

The principle commonly associated with Dr. A.P.J. Abdul Kalam that work is a continuous process and that adequate importance should also be given to family responsibilities highlights the need for a balanced approach towards official duties and personal responsibilities.

3. NEED FOR TECHNICAL ASSISTANTS

The effective functioning of an Engineering Section depends upon adequate technical support at the Assistant Engineer level.

At present, approximately 500 Field Assistant Engineers and around 100 Quality Control Assistant Engineers are responsible for works under the current year's CRIDP programme, involving a total value of approximately ₹9,300 crore. In addition, several Assistant Engineers working in other wings, including NH, NH-QC, BMU, Road Safety and Regional Laboratories, contribute significantly to the development and maintenance of infrastructure.

An Assistant Engineer is required to independently handle the complete cycle of departmental works, including:

- ❖ Preliminary investigations such as CBR and BBD;
- ❖ Site surveying;
- ❖ Preparation of estimates;
- ❖ Preparation of drawings and specifications;
- ❖ Obtaining Technical Sanction;
- ❖ Tender processing;
- ❖ Checking the quality of materials and works;
- ❖ Preparation of bills;
- ❖ Maintenance of work records;
- ❖ Site inspections;
- ❖ Routine maintenance works;
- ❖ Laboratory and field quality-control tests; and
- ❖ Documentation through photographs and videos.

Although ADEs, DEs, SEs and CEs inspect and review the works, substantial field-level execution and technical responsibilities rest with Assistant Engineers.

Existing Technical Support in Other Departments

A comparison with other Engineering Departments indicates a significant gap in technical manpower:

- In the Rural Development Department, each Assistant Engineer is supported by 2–3 Overseers with a minimum Diploma qualification.
- In the PWD Department and TNEB, sanctioned Technical Assistant posts are available to support Assistant Engineers in technical activities.
- In the Highways Department, there is presently no equivalent sanctioned technical supporting post under the Assistant Engineer with a minimum Diploma qualification.

Considering the scale of works handled by the Highways Department and the technical responsibilities entrusted to Assistant Engineers, Diploma-qualified Technical Assistants would provide essential technical support for effective execution, supervision and maintenance.

Solution

It is therefore requested that a staffing norm of two Diploma-qualified Technical Assistants for every Assistant Engineer may be prescribed and implemented.

4. NEED FOR COMPUTER OPERATORS

Assistant Engineers are primarily site officers, and a major portion of their responsibilities involves field inspection, supervision, measurement, quality control and execution of works.

At the same time, Assistant Engineers are required to undertake extensive computer-based and documentation-related activities, including:

- ❖ Preparation of estimates and bills;
- ❖ Data entry and compilation;
- ❖ Preparation of reports;
- ❖ Official e-mail correspondence;

- ❖ Preparation of replies to information sought by higher authorities;
- ❖ Compilation and forwarding of departmental information;
- ❖ Maintenance of digital records; and
- ❖ Other online departmental activities.

These activities cannot be effectively undertaken while an Assistant Engineer is simultaneously engaged in field duties.

Therefore, providing dedicated Computer Operators would enable Assistant Engineers to concentrate primarily on their essential technical and field responsibilities while ensuring timely completion of computer-based and documentation-related work.

Solution

It is requested that one Computer Operator for every Assistant Engineer may be sanctioned and engaged.

5. NEED FOR ROAD INSPECTORS AND GANG MAZDOORS

The shortage of field-level supporting staff further increases the workload on Assistant Engineers.

As per the Highways Manual, Volume IV, there should be:

- ❖ One Road Inspector for every 25 km of road; and
- ❖ Two Gang Mazdoors for every 8 km of road.

However, in several locations, the available manpower is substantially below these prescribed norms. In some instances, there is not even one Road Inspector for 100 km of road, while only around 2–3 gangs may be available for approximately 100 km.

In view of the shortage of field-level manpower, the required number of Road Inspectors and Gang Mazdoors should be provided in accordance with the prescribed norms.

Solution

It is requested that the staffing norms prescribed in Highways Manual, Volume IV, namely one Road Inspector for every 25 km and two Gang Mazdoors for every 8 km, may be implemented.

6. NEED FORFIELD ASSISTANTS,LAB ASSISTANTS, GANG MAZDOORS AND LABORATORY INFRASTRUCTURE

The effective functioning of Quality Control Subdivisions depends upon adequate technical and field-level supporting staff.

At present, vacancies of Field Assistants, Lab Assistants and Gang Mazdoors in Quality Control Subdivisions affect the timely conduct of quality-control tests and field investigations.

Quality Control Assistant Engineers are required to conduct and supervise laboratory and field tests, including:

- Collection of samples;
- Preparation of test specimens;
- Conducting laboratory tests;
- Recording observations;
- Maintaining test records;
- Field investigations; and
- Preparation of technical reports.

The absence of sufficientField Assistants and Lab Assistants places additional technical and supporting responsibilities on Assistant Engineers and may affect the timely completion of quality-control activities.

Similarly, Gang Mazdoors are required to assist in field activities such as sample collection, handling of materials, preparation of test locations and other field investigations. Shortage of such manpower makes it difficult to conduct required tests, particularly at remote work locations.

Further, several newly formed Quality Control Subdivisions do not have adequate laboratory infrastructure, while some existing Subdivisions also do not have separate laboratory facilities.

It is also pertinent to point out that, as stated in the Highways and Minor Ports Department Government Order dated 12.04.2013, posts of Technical Assistants, Lab Assistants and Gangmen have been sanctioned in Regional Laboratories. Therefore, the issue is also one of filling already sanctioned posts and ensuring their effective utilisation.

Solution

It is requested that:

1. Vacant Field Assistants, Lab Assistant and Gang Mazdoor posts in Quality Control Subdivisions be filled;
2. All sanctioned posts in Regional Laboratories and HRS, including Technical Assistants, Lab Assistants and Gangmen, be filled without further delay;
3. Adequate supporting manpower be provided for field and laboratory activities; and
4. Dedicated and properly equipped laboratory infrastructure be provided in all Quality Control Subdivisions, particularly newly formed Subdivisions and those presently without separate laboratory facilities.

7. PROVISION OF ADEQUATE TRAVELLING ALLOWANCE AND OFFICIAL VEHICLES

Assistant Engineers are required to maintain and supervise approximately 150–200 km of SH, MDR and ODR roads, involving extensive travel to remote locations where public transport is often unavailable.

Consequently, Assistant Engineers frequently depend on personal two-wheelers for official field travel and may incur substantial expenditure towards fuel, maintenance and travel-related expenses. The existing Travelling Allowance, including approximately ₹900 for C&M AEs and approximately ₹2,500 (5% of Basic Pay) for other AEs, including Quality Control AEs, may not adequately reflect the actual requirements of extensive field travel.

Frequent dependence on personal two-wheelers also exposes Engineers to increased road-safety risks. There have unfortunately been instances of Assistant Engineers losing their lives in road accidents while performing official duties.

It is also pertinent that officers in the Tamil Nadu Government who are provided fixed Travelling Allowance (FTA) for field duties are generally supported with departmental vehicles for official travel.

In certain special wings, such as the Road Safety, Bridge Monitoring Units etc., the situation is even more difficult. They do not even have Travelling Allowance for their field duties. Without departmental vehicles or provisions for hiring vehicles, they are unable to carry out their duties properly

The Department may therefore consider providing suitable official vehicles to Assistant Engineers based on their field requirements or establishing an accessible and effective vehicle-hiring mechanism.

Solution

It is requested that:

- Travelling Allowance be suitably revised based on actual field requirements;
- Suitable departmental vehicles be provided wherever necessary; or
- A readily accessible vehicle-hiring mechanism be established;
- Applicable travel limits be revised suitably; and
- Assistant Engineers should not be compelled to bear substantial official travel expenses personally or depend on personal vehicles for extensive departmental field duties.

8. INCREASE IN FUEL ALLOCATION FOR EXISTING JEEPS

The existing monthly fuel allocation of approximately 90 litres for Sub-Division-level Jeeps and 110 litres for Division-level Jeeps is inadequate for extensive field inspections and road-maintenance activities.

It is requested that the monthly fuel allocation may be increased to a minimum of 200 litres, considering the field requirements and the fuel allocation already provided for externally aided projects within the Highways Department.

9. OFFICE MAINTENANCE FUND

An office requires regular expenditure for the smooth functioning of day-to-day departmental activities.

The existing arrangements may not adequately meet recurring requirements relating to:

- Printing and stationery;
- Paper and office consumables;
- Electricity charges;
- Computer-related services and maintenance;
- Sanitary and cleaning requirements;
- Internet and communication services;
- Court-related official expenses; and
- Repair, maintenance and replacement of laptops and other essential electronic equipment.

These are essential requirements for maintaining official records, processing estimates and bills, preparing reports and correspondence, and carrying out routine departmental work.

In the absence of a dedicated and adequate fund, Assistant Engineers may face difficulties in meeting such expenses in a timely manner.

Solution

Adequate funds may therefore be provided under 3054-80-001-AE-305-02 – Office Expenses – Other Contingencies, together with a clear and timely reimbursement mechanism, so that essential office, communication, computer and electronic-device-related expenses can be met without affecting departmental functioning or placing a personal financial burden on employees.

10. BUILDING MAINTENANCE FUND – 2059-80-053

Assistant Engineers are responsible for maintaining departmental office buildings and ensuring that such offices remain functional and in proper working condition.

An adequate Building Maintenance Fund is therefore necessary to meet essential requirements such as:

- ❖ Minor civil repairs;
- ❖ Electrical repairs;
- ❖ Plumbing works;
- ❖ Repair and replacement of fixtures;
- ❖ Painting; and
- ❖ Other essential building-maintenance works.

Due to the absence of adequate funds, even minor repairs may sometimes have to be arranged through personal expenditure, placing an avoidable financial burden on Assistant Engineers.

Solution

It is requested that an adequate Building Maintenance Fund under 2059-80-053 may be provided to enable timely maintenance and ensure that departmental offices remain safe, functional and properly maintained.

or else

It is requested to employ Annual Maintenance Contract system for Building maintenance including House Keeping of building and premises, Sanitation, Maintenance of Plumbing and Electricity – both for Office Buildings and for Inspection Bungalows

11. REVOLVING FUND – INVESTIGATION AND ESTIMATION

The Revolving Fund under 5054-80-004-AA – Before Estimation Fund is required to meet preliminary investigation expenses incurred before preparation of estimates for road works.

Such investigations include:

- Road-level surveys;
- CBR (California Bearing Ratio) tests;
- BBD (Benkelman Beam Deflection) tests;
- Preliminary field investigations;
- Documentation of existing road conditions; and
- Pre-estimate video documentation.

These investigations are necessary for assessing the existing condition of the road and determining appropriate technical requirements for proposed works.

At present, Assistant Engineers may be required to meet certain preliminary investigation expenses from their personal funds, particularly for CBR, BBD and related field investigations.

Solution

It is requested that an adequate Revolving Fund under 5054-80-004-AA – Before Estimation may be provided and maintained to meet preliminary investigation and documentation expenses, including CBR, BBD, road-level surveys and pre-estimate video documentation.

This will ensure that necessary technical investigations are not delayed due to non-availability of funds.

12. REFORMATION OF ROAD MAINTENANCE

Road maintenance is essential for ensuring the safety, serviceability and durability of the road network.

Major maintenance activities include:

- Median painting and cleaning;
- Speed-breaker marking using thermoplastic paint;
- Tree banding;
- Bridge and culvert maintenance, including removal of vegetation;
- Patching of damaged road surfaces;
- Monsoon and flood disaster management;
- Immediate road-safety measures; and
- Eviction of encroachments, including labour, Tipper and JCB charges where required.

The expenditure involved in routine maintenance may be substantial. For example, the average maintenance expenditure for certain sections may include significant recurring costs for median painting, speed-breaker marking, tree banding, bridge and culvert maintenance and road patching. Expenditure may further increase during periods requiring emergency maintenance or special arrangements.

However, the fund allocation available for individual sections may not always correspond to the actual maintenance requirements.

Solution

It is requested that Road Maintenance activities may be expeditiously and comprehensively implemented through Short term maintenance contract (STMC), as assured by the Hon'ble Minister during the current Assembly Session.

13. ADMINISTRATIVE DIFFICULTIES FACED BY ASSISTANT ENGINEERS

a. Burden of Rental Office Buildings

Due to departmental reorganization, additional buildings are required for the functioning of Sub-Divisions and Sections.

However, advance payments and rental-related expenses for such buildings may, in some instances, be borne by Assistant Engineers from their personal funds. This creates an additional financial burden on Engineers for arrangements required for the functioning of Government offices.

The Department may therefore make appropriate budgetary and administrative arrangements so that Government office-related rental expenditure is met through departmental funds.

b. Transfer-Related Difficulties

Transfers of Assistant Engineers have remained uncertain for prolonged periods, and obtaining transfers has not always been a predictable process.

The recent departmental reorganization has caused difficulties for several Assistant Engineers, particularly those posted at locations far from their families and homes. In certain cases, Engineers have reportedly been posted approximately 200–400 km away from their native/home locations.

A transparent, predictable and rule-based transfer mechanism would help reduce prolonged uncertainty and personal hardship.

Also, **General Transfers** in the Highways Department have not been conducted in recent years, with the last General Transfer having been carried out several years ago. As a result, the prescribed norms relating to

tenure, including 3 years in a Station, 5 years in a Division, Division Break after 5 years and Circle Break after 10 years, have not been uniformly followed.

Engineers who have been continuously serving for long periods in the same or nearby Stations / Divisions are facing difficulties in obtaining transfers. Further, a large number of newly recruited personnel during 2023–2026 have been posted in Chennai, limiting their opportunities to serve in their native districts or preferred regions.

Necessary action may therefore be taken to conduct General Transfers regularly and ensure uniform and transparent implementation of the existing norms, providing fair transfer opportunities to all Engineers.

c. Confidential Reports and Selection Grade

Difficulties relating to Confidential Reports (CRs) may affect the timely processing of promotions and other service benefits.

In some cases, CRs from previous workplaces may not be received or forwarded to the DG Office within the required time, resulting in delays and uncertainty.

Similarly, obtaining Selection Grade, which is an entitlement of eligible Assistant Engineers, may involve lengthy procedural requirements.

Assistant Engineers already undertake substantial technical and field responsibilities. They should not be required to spend disproportionate time pursuing procedural matters relating to their own service benefits.

It is therefore requested that the processing of CRs, promotions and Selection Grade may be streamlined and made time-bound.

d. Retrospective Action in Respect of Works Completed Several Years Earlier

Works may sometimes be inspected several years after completion, and observations may subsequently be made regarding thickness or binder content based on conditions existing at the time of later inspection.

In respect of bituminous works, factors such as traffic, wear, oxidation, weathering and ageing may affect the condition and properties of the pavement over time. In particular, Bituminous Concrete (BC) functions as a wearing course, and the thickness remaining after several years of traffic may not necessarily represent the original executed thickness.

Therefore, while technical quality must be duly ensured, assessment of works completed several years earlier should consider the original test records, measurements, specifications, quality-control records, traffic

exposure, ageing and other relevant technical factors existing during execution.

This would ensure that accountability is determined on the basis of technically appropriate evidence relating to the circumstances prevailing at the time of execution.

14. CONTRACT AGREEMENT REFORMS, CONTRACTOR RESPONSIBILITY AND PREVENTION OF UNWARRANTED LIABILITY ON ENGINEERS

1. Road Safety and Accident Responsibility

Road-safety provisions should be standardised in the contract agreement, and implementation of the prescribed safety arrangements should be made a mandatory responsibility of the Contractor in accordance with the applicable SSRB provisions.

Where an accident occurs due to failure of the Contractor to provide or maintain prescribed safety measures, responsibility should be determined in accordance with the contractual allocation of responsibilities, provided that the Engineer has duly communicated, recorded and enforced the prescribed safety requirements.

2. Work-Zone Safety Schedule and Safety Drawing

The contract should include a mandatory Work-Zone Safety Schedule and Safety Drawing, with implementation being the responsibility of the Contractor in accordance with the applicable SSRB provisions.

Where the Contractor fails to provide the required safety arrangements, the Engineer should be empowered, subject to the applicable rules and contract provisions, to arrange the necessary safety measures through another agency and recover the expenditure from the Contractor.

3. Reduced Pay Factor

Provision for acceptance of works with a reduced pay factor should be incorporated in the contract agreement in accordance with IRC:SP:112-2017, Clause 11.3, along with clearly defined conditions and procedures.

The contract should clearly distinguish among:

- ❖ Accept;
- ❖ Accept with Reduced Pay;
- ❖ Rectify; and

- ❖ Reject and Replace.

The conditions and procedure applicable to each category should be clearly specified in the contract documents.

4. PMIS-Based RFI System

Implementation of the PMIS-based Request for Inspection (RFI) system should be expedited for major construction activities.

Mandatory digital submission, inspection, approval and closure of RFIs would help ensure proper documentation, quality control, transparency and clear accountability among the concerned parties.

5. Defect Liability

Any defects identified in completed works during the Defect Liability Period should ordinarily be addressed in accordance with the contractual obligations of the Contractor.

The contract should clearly specify:

- ❖ The notice procedure;
- ❖ The period for rectification;
- ❖ Contractor responsibility for rectification;
- ❖ Re-inspection procedure; and
- ❖ Consequences of failure to rectify within the prescribed period.

Where defects fall within the Contractor's contractual responsibility, rectification should be carried out by the Contractor at its own cost in accordance with the contract conditions.

15. ACCEPTANCE LIMITS FOR ROAD CONSTRUCTION WORKS – IRC:SP:112-2017

Road construction is a process involving materials and construction activities that naturally exhibit a certain degree of variability. Test results obtained from samples collected from different locations or at different times may therefore vary.

Accordingly, during technical inspection and quality assessment, such natural variability should be considered and test results should be evaluated based on scientifically and statistically justified acceptance criteria.

It is therefore requested that the Board of Engineers, in association with the Highway Research Station (HRS), may develop and prescribe scientifically sound and technically appropriate Acceptance Limits for road construction works.

Such criteria may take into account:

- ❖ Variations in material properties;
- ❖ Location of sampling;

- ❖ Time of sampling;
- ❖ Construction conditions;
- ❖ Testing variability; and
- ❖ Relevant statistical principles.

This would provide greater technical clarity and consistency in the assessment of road construction quality.

16. DEDICATED FUND FOR TIMELY DISPOSAL OF NAMMA SALAI APP PETITIONS

Petitions received through the Namma Salai App are required to be attended to and closed within the prescribed period.

Several complaints may require immediate minor repair and maintenance works involving expenditure. At present, the absence of a readily accessible field-level fund may delay rectification even when the concerned Engineer is prepared to attend to the complaint immediately.

Solution

It is requested that a dedicated Ready Fund/Petty Maintenance Fund may be provided specifically for attending to Namma Salai App complaints.

A simple and expedited procedure for incurring, accounting for and subsequently auditing such expenditure may also be prescribed so that complaints can be rectified and closed within the prescribed period.

17. ENHANCEMENT OF PERMANENT IMPREST

The Permanent Imprest available to Engineers should be reviewed considering the present-day cost of minor official expenditure and field requirements.

It is submitted that the PWD Department has enhanced the Permanent Imprest to ₹5,000 for Assistant Engineers and ₹8,000 for Assistant Executive Engineers.

Considering the nature and extent of field responsibilities in the Highways Department, the Permanent Imprest available to Highways Engineers may also be enhanced suitably.

18. REVISION OF HIGHWAYS MANUAL AND CLEAR DEFINITION OF THE ROLE AND RESPONSIBILITIES OF ASSISTANT ENGINEERS

a) Comprehensive Revision of Highways Manual

The Highways Manual requires comprehensive revision, particularly with regard to the monetary and financial limits prescribed for various works and powers.

The existing provisions were framed several decades ago and may not adequately reflect:

- ❖ Present-day construction costs;
- ❖ Current financial implications;
- ❖ Increased volume and complexity of departmental works;
- ❖ Technological developments;
- ❖ Digital systems; and
- ❖ Present Government expenditure requirements.

It is therefore requested that the Highways Manual may be comprehensively revised and updated to reflect current requirements.

b) Role, Powers, Duties and Responsibilities of Assistant Engineers

The present-day role of Assistant Engineers has expanded considerably and includes technical, field, quality-control, contractual, documentation, digital and administrative responsibilities.

Therefore, the Highways Manual should clearly and separately incorporate the:

- ❖ Role of Assistant Engineers;
- ❖ Powers delegated to Assistant Engineers;
- ❖ Technical duties;
- ❖ Field responsibilities;
- ❖ Quality-control responsibilities;
- ❖ Contractual responsibilities;
- ❖ Digital and documentation responsibilities;
- ❖ Administrative responsibilities; and
- ❖ Corresponding accountability.

The responsibilities assigned to Assistant Engineers should be appropriately matched with corresponding powers, financial authority, technical support and administrative resources.

CONCLUSION

In view of the above, we respectfully request the Government and the Highways Department to consider the above issues comprehensively and initiate appropriate action for their time-bound resolution.

The issues highlighted in this representation relate not only to the service conditions of Assistant Engineers but also to the effective functioning, technical quality, road safety, accountability and efficiency of the Highways Department.

Providing adequate technical manpower, field-level support, laboratory facilities, financial resources, official mobility, clear contractual responsibilities and updated administrative provisions would enable Assistant Engineers to discharge their responsibilities more effectively and efficiently.

We therefore respectfully request that the above demands may kindly be considered on priority and that appropriate orders and necessary administrative and financial measures may be initiated for their early implementation.

We remain committed to extending our full cooperation for the effective functioning, modernisation and strengthening of the Tamil Nadu Highways Department.

Thanking you,

Yours faithfully,

General Secretary

17.10.2026 அன்று சங்கத்தின்
69வது பொதுக்குழு கூட்டம்
அனைவரும் திரள்வோம் மதுரையில்!

05.09.2026 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்ட நடவடிக்கைகள்

துணைத் தலைவர் பொறிஞர் சோ.பாண்டியன் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்

வ.எண்.	பதவி
1	பொறிஞர் அ.கிருஷ்ணன், துணைத் தலைவர்
2	பொறிஞர் ப.வீரமணி, பொதுச் செயலாளர்
3	பொறிஞர் ஜி.விஜயராகவன், செயலாளர்
4	பொறிஞர் சொ.தியாகராஜா, பொருளாளர்
5	பொறிஞர் பி.அசோக்குமார், செயற்குழு உறுப்பினர்
6	பொறிஞர் ஜி.முத்து முனி குமாரி, செயற்குழு உறுப்பினர்
7	பொறிஞர் சி.நடராஜன், செயற்குழு உறுப்பினர்
8	பொறிஞர் ஜெ.பிரேம் ஆனந்த், செயற்குழு உறுப்பினர்
9	பொறிஞர் ஆர்.ராஜா, செயற்குழு உறுப்பினர்
10	பொறிஞர் கே.ஸ்ரீராம், செயற்குழு உறுப்பினர்
11	பொறிஞர் டி.விவேகானந்தன், செயற்குழு உறுப்பினர்

செயற்குழுவில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

1. மறைந்த செயற்குழு உறுப்பினர் **பொறிஞர் நெ.ஜாகிர் உசேன்** அவர்கள் குடும்பத்தினர் வேண்டுகோளுக்கு இணங்க உறுப்பினர்களிடம் நிதி வசூலித்து வழங்குவதென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது .

2. 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தை 17.10.2026 அன்று மதுரையில் நடத்துவதெனவும், அதனுடன் இணைந்து முன்னாள் நிர்வாகிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கும் நிகழ்ச்சியும், புதிதாகப் பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்களை வரவேற்கும் முப்பெரும் விழாவாக நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், விழாவிற்கான 17.10.2026, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை இறுதி செய்து, அனைத்து உறுப்பினர்களுக்கும் முறையான அறிவிப்பை (Notice) உடனடியாக அனுப்பி வைக்குமாறு பொதுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது..

3. 2012 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த தகுதியான உதவிப் பொறியாளர்களுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பதவி உயர்வை விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், அரசின் நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு, 3:1 விகிதாச்சார அடிப்படையில் உதவிக் கோட்டப் பொறியாளர் (Assistant Divisional Engineer) பதவி உயர்வு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை சங்கத்தின் செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

4. செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC) மற்றும் உக்கடம் மேம்பாலம் தொடர்பாக நிலுவையில் உள்ள ஒழுங்கு நடவடிக்கைகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட விவகாரங்கள் தொடர்பாக உரிய விளக்கங்களைப் பெற்று, நீண்டகாலமாக

நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணுமாறு முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

5. புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அலுவலகங்களுக்கு தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், நிதி ஒதுக்கீடு செய்தல் கோட்ட வரைவாளர், கண்காணிப்பாளர் மற்றும் தற்காலிக பணியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவதென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

6. மாநிலத்தில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களின் சீரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு தேவையான உரிய நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்து வலியுறுத்துவது என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

7. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் (HRS) தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின்கீழ் இயங்கும் AE (QC), ADE (QC) மற்றும் DE (QC) ஆகிய அலுவலர்கள் சமர்ப்பிக்கும் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளுடன் (Monthly Progress Reports) இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் குறித்த அறிவுறுத்தல்கள் விவாதிக்கப்பட்டு, நடைமுறைக்கு சாத்தியமான IDS GO.323-ன்படி தெளிவுரைகளைப் பெற நடவடிக்கை எடுக்க இயக்குநர் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் அவர்களை வலியுறுத்துவது என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

8. துறை மறுசீரமைப்பினால் (Departmental Reorganisation) ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள், குறைபாடுகள் மற்றும் சிரமங்களை நிவர்த்தி செய்ய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று தகுந்த தீர்வு காண முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவது என செயற்குழுவில் ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

9. உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு Permanent Imprest மற்றும் Temporary Imprest தற்போது நடைமுறையில் இல்லாததால், அவர்கள் மேற்கொள்ளும் Petty Expenses-க்கான தொகையை பட்டுவாடா செய்வதற்கு புதிய வழிவகை ஏற்படுத்த வேண்டும் என செயற்குழு வலியுறுத்துகிறது. இதனால், அத்தியாவசியப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள முடியாமல் ஏற்படும் தாமதத்தின் காரணமாக, துறைக்கும் அரசுக்கும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் நிலை உருவாகக்கூடும்.

10. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் -II அலகினை ஒப்படைப்பு செய்து தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையம் உடன் இணைப்பதாக தெரிய வருகிறது. அரசின் நிரந்தர பணிகளை மறுபணியமர்வு மூலமாக துறையை விரிவாக்கம் செய்ய வேண்டுமெனவும் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்திற்கு அயற்பணியின் மூலம் துறையில் உள்ள பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களை பணியமர்த்த வேண்டுமென செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது .

11. சாலைகள் மற்றும் பாலங்களை முறையாகப் பராமரிப்பதற்காக, ஒவ்வொரு 8 கி.மீ. சாலைக்கும் 2 சாலைப் பணியாளர்களும், ஒவ்வொரு 25 கி.மீ. சாலைக்கும் 1 சாலை ஆய்வாளர் அல்லது திறன்மிகு உதவியாளரும் பணியமர்த்தப்பட வேண்டிய நடைமுறை உள்ளது. ஆனால், தற்போது பெரும்பாலான இடங்களில் மேற்கண்ட பணியிடங்கள் காலியாக உள்ளதால், சாலைகள் மற்றும் பாலங்களின் பராமரிப்புப் பணிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, காலியாக உள்ள பணியிடங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, தற்காலிகப் பணியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை நியமிப்பதற்கான உரிய வழிகாட்டுதல்கள் மற்றும் அனுமதிகளை விரைந்து வழங்கிட, முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்துவது என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

12. பொது மாறுதல் (General Transfers) மற்றும் விருப்ப மாறுதல் (Willing Transfers) கோரி விண்ணப்பித்துள்ள பொறியாளர்களின் கோரிக்கைகள் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதால், அவர்களின் பணித் திறனும் மன அமைதியும் பாதிக்கப்படுகின்றன என்பதை இச்செயற்குழு சுட்டிக்காட்டுகிறது. எனவே, நிலுவையில் உள்ள அனைத்து மாறுதல் விண்ணப்பங்களையும் உடனடியாகப் பரிசீலித்து, எவ்வித காலதாமதமுமின்றி தகுதியான பொறியாளர்களுக்கு மாறுதல் ஆணைகளை (Transfer Orders) விரைந்து வெளியிட வேண்டும் என செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

13. துறை மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள நிர்வாகச் சமநிலையின்மைகளைச் சரிசெய்வதற்கும், உறுப்பினர்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகளைப் பெற்று, அவற்றை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கும் கீழ்கண்ட நிர்வாகிகளைக் கொண்ட குழு அமைக்கப்படுகிறது:

1. பொறிஞர் ஜி.குரு - சென்னை மண்டலம்
2. பொறிஞர் சி. நடராஜன் - திருச்சி மண்டலம்
3. பொறிஞர் க.மோகன்ராஜ்- கோவை மண்டலம்
4. பொறிஞர் கோ.முத்துமுனிகுமாரி - மதுரை மண்டலம்

14. தற்போது செயற்குழுவில் காலியாக உள்ள செயற்குழு உறுப்பினர் பதவிக்கு, சங்க விதிமுறைகளின்படி 9(iii) பொறிஞர் எம். கே. சரவணன், உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கும்மிடிபூண்டி அவர்களைச் செயற்குழு உறுப்பினராக ஒருமனதாகத் தேர்வு செய்து நியமிக்கலாம் எனச் செயற்குழு தீர்மானிக்கிறது.

15. பொறிஞர் சே. இராமநாதன் அவர்கள் தலைவர் பதவியிலிருந்து விலகியதை செயற்குழு வருத்தத்துடன் ஏற்றுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், அடுத்த தலைவரைத் தேர்வு செய்வது தொடர்பாக அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் பரிசீலித்து முடிவு செய்யப்படும்.

16. உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளர்கள் 10 ஆண்டுக்கு மேல் அப்பதவியில் பணிபுரிந்துள்ளனர் அவர்களுக்கு அப்பதவியில் தேர்வு நிலை (Selection Grade) வழங்கப்படாமல் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. அதற்கு தகுந்த தீர்வு காண முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்தி செயற்குழு கேட்டுக் கொள்கிறது

17. உதவிப் பொறியாளர்களின் பணித்தளம் மற்றும் அலுவலகம் சார்ந்து தற்போது நிலவிவரும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் சிரமங்களுக்குத் தீர்வு கோரி, மண்டல வாரியாகத் தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும், மாவட்டக் கிளைக் கூட்டம் மூலம் தீர்மானம் நிறைவேற்றி தலைமைச் சங்கத்திற்கு தெரிவித்தப் பின்னர் கவன ஆர்ப்பாட்டத்தை நடத்துவது என்றும் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

18. பொறியாளர்களின் குறைதீர்க் கூட்டம் காலாண்டுக்கு ஒருமுறை கண்காணிப்புப் பொறியாளர் அவர்கள் மூலம் நடத்தப்பட வேண்டும் என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

19. நெடுஞ்சாலைத்துறையில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் பணிபுரியும் உதவிப் பெிறயாளர்களுக்கு தற்பொழுது நிர்ணயிக்கப்பட்ட பயணப்படி தள ஆய்வு செய்ய போதுமானதாக இல்லை என்பதால் பிற அலகுகளில் உள்ளது போன்று பயணப்படி வழங்க முதன்மை இயக்குநர் அவர்களை வலியுறுத்தி செயற்குழு கேட்டுக் கொள்கிறது. மேலும், வட்ட அலுவலகம் மற்றும் தலைமைப் பொறியாளர் அலுவலகம் செல்வதற்கு அதிகார எல்லைக்கு வெளியே (outside jurisdiction) வழங்கும் பயணப்படியை சேர்த்து வழங்க வேண்டும் என செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

ஒம்/- **ஒம்/-**

துணைத்தலைவர் **பொதுச் செயலாளர்**

இரு மொழிக் கொள்கை

பொறிஞர் பாபு சந்திரசேகர், பி.இ., எப்.ஐ.இ.,
சிறப்பு தலைமைப் பொறியாளர் (ஓய்வு),
மாம்பழப்பட்டு, விழுப்புரம் வட்டம்

அடிப்படை அறிவு பெற தமிழ்! உலகவியல் அறிவுப் பெற ஆங்கிலம்!

இந்தியா பல மொழி பேசும் தேசம் ஆங்கிலேயர்களை வெளியேற்ற போராட்டம் நடத்திய காங்கிரஸ் இந்திய மக்களை ஒன்றுபடுத்த ஒருங்கிணைப்பு மொழியாக அல்லது ஆட்சி மொழியாக பெரும்பான்மையினர் பேசும் இந்தி மொழியினை பயன்படுத்த முடிவெடுத்தது. இந்தி மொழியினை கற்றுக்கொள்ளுங்கள் என்றார் காந்தி. கல்விக்கூடங்களில் மும்மொழித்திட்டம் கொண்டுவர வேண்டும் படிப்படியாக அந்நிய மொழியான ஆங்கிலத்தின் முக்கியத்துவம் குறைக்கப்பட வேண்டும் என்று கருதியது அரசு.

முதல் மொழிப் போர் (சில பள்ளிகளில் கட்டாய இந்தி)

1937-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல்முதலாக தமிழக சட்டமன்ற தேர்தல் நடந்து இராஜாஜி முதல்வர் ஆனார்.

நிதி நிலை அறிக்கையில் (21.4.1938) சென்னை மாகாணத்தில் 125 உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாட மொழியாக கற்பிக்கப்படும் என்றார். தமிழ் அல்லது தெலுங்கு அல்லது கன்னடம் அல்லது மலையாளம் (தாய் மொழி) + ஆங்கிலம் அனைத்து பள்ளிகளிலும் + இந்தி 125 பள்ளிகளில்) எதிர் கட்சித் தலைவர் (நீதிக்கட்சி) திரு.எம்.ஏ.முத்தையா செட்டியார் அவர்கள் இதனை கடுமையாக எதிர்த்தார்.

இந்தி திணிப்புப் போராட்டங்களை நடத்துவது குறித்து இந்தி எதிர்ப்பு வாரியம் 28.5.1938ல் உருவாக்கப்பட்டது. தலைவர் சோமசுந்தர பாரதியார். செயலர். கி.ஆ.பே. விஸ்வநாதம், அறவழியில் போராட்டம் துவங்கியது.

ஆங்கிலேயர்கள் இரண்டாம் உலகப்போரில் இந்தியாவை ஈடுபடுத்தியது தவறு எனக்கூறி முதல்வர் இராஜாஜி 28.10.1939ல் பதவி விலகினார். கட்டாய இந்திக்கு பொதுமக்களிடம் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டதால் அரசு இந்தி திணிப்பை பள்ளிகளில் கைவிட்டது.

1948 அறப்போர்

20.6.1948ல் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார் சென்னை மாகாணத்தில் தமிழ் வழங்கும் பகுதிகளில் (மும்மொழி பாடத் திட்டம்) இந்தி விருப்பப் பாடமாகவும் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி வழங்கும் பகுதிகளில் கட்டாயப் பாடமாக இருக்கும் என அறிவித்தார். முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரிடமும், கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியாரிடமும், நேரில் பெரியார் பேசினார். தீர்வு கிடைக்கவில்லை. திராவிட கழகம் (2.8.1948) அமைச்சர் பெருமக்களுக்கு கருப்புக் கொடி காட்டுவது என முடிவெடுத்தது. இந்த போராட்டத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். கட்டாய இந்தியை புகுத்திய அவினாசிலிங்கம் செட்டியார் பதவி விலகினார். கட்டாய இந்தி கைவிடப்பட்டது.

ஆட்சி மொழி

முதல் 2கட்ட போராட்டங்கள் இந்தியை குறிப்பிட்ட பள்ளிகளில் பாட மொழியாக வைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து நடந்தவை. 1950ல் நிலைமை முற்றிலுமாக மாறிவிட்டது. இந்தியாவிலுள்ள ஒரு மொழியே இந்தியாவுக்குத் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று அரசியல் நிர்ணய அவை உறுப்பினர்கள் விரும்பினார்கள். இந்திதான் அதற்குத் தகுதி உடையது என்று அதனை தேசிய மொழியாக அறிவித்தார்கள்.

ஆட்சி மொழி ஆணையம்

மாநிலங்களுக்கு இடையே தொடர்பு கொள்ள வேண்டிய மொழி வளர்ச்சி குறித்து குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்ய 7.6.1955ல் ஆட்சி மொழி ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு இந்தி திணிப்பை எதிர்க்கக்கூடிய இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள கட்சிகளிடம் கருத்து கேட்கவில்லை. ஆணையம் கீழ்க்கண்ட பரிந்துரைகளை வழங்கியது.

1. உச்ச நீதிமன்றம் இந்தி மொழியிலேயே செயல்பட வேண்டும்

2. சட்ட புத்தகங்கள் இந்தியில் இருக்க வேண்டும்

3. மத்திய அரசு பணிகளில் இந்தி மொழி அறிந்தவர்கள் தேர்வு செய்யப்படுதல் வேண்டும்.

4. நாடாளுமன்ற சட்ட மன்ற சட்டங்கள் இந்தி மொழியில் இருக்க வேண்டும்.

5. ஆங்கிலத்தின் பயன்பாட்டை கால வரையரையுடன் குறைக்க வேண்டும்.

இதனால் இந்தியை கற்றுக்கொண்டே தீரவேண்டும் என்ற நிலை உருவாகியது. மாமல்லபுரத்தில் தமிழக முதல்வர் காமராசர், ஆந்திர முதல்வர் நீலம் சஞ்சீவரெட்டி, கர்நாடக முதல்வர் நிஜலிங்கப்பா ஆகியோர் இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும் வரை ஆங்கிலமே ஆட்சி மொழியாக தொடர வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

1965ஆம் ஆண்டு முதல் இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழி என குடியரசுத்தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத் 7.4.1960ல் அறிவித்தார். குமார பாளையத்தில் 18.6.1960ல் அமைக்கப்பட்ட போராட்டக்குழுவின் தலைவராக ஈ.வி.கே.சம்பத் நேருவுக்கு கடிதம் எழுதினார். பிரதமர் நேரு அவர்கள் இந்தி பேசாத மக்களின் கோரிக்கைகளை மத்திய அரசு புறக்கணிக்காது இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் ஆட்சி மொழியாக தொடரும் என 7.8.1959ல் நாடாளுமன்றத்தில் அவர் தந்த வாக்குறுதியை உறுதி செய்து சம்பத் அவர்களுக்கு கடிதம் எழுதினார்.

ஆட்சி மொழி சட்டம்

26.1.1965 முதல் இந்தியாவின் ஆட்சி மொழி இந்தி மட்டும்தான் என 13.4.1963ல் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் புதிய மசோதா ஒன்றை கொண்டு வந்தார். நேருவின் வாக்குறுதி என்ன ஆயிற்று என அறிஞர் அண்ணா அவர்களும், நாஞ்சில் கே.மனோகரன் அவர்களும் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினார்கள். 26.1.1965 குடியரசு தினத்தை துக்கநாள் என அறிஞர் அண்ணா அறிவித்தார்.

ஜனவரி புரட்சியும் தீக்குளிப்பும்

25.1.1964 அன்று காலை திருச்சி இரயில் நிலையம் அருகில் சின்னசாமி என்ற இளைஞர் தன்னுடைய உடலுக்கு தீ வைத்து கொண்டார் மற்றும் பலர் தீக்குளித்தார்கள்.

1965 மாணவர்கள் எழுச்சி

இந்திக்கு எதிராக தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள திரண்டனர். திராவிடர் மாணவர் முன்னேற்ற கழகத்தை சார்ந்த திரு.எல்.கணேசன்,

திரு.துரைமுருகன், திரு.பி.சீனிவாசன், திரு.காளிமுத்து, திரு.காமராஜ் ஆகியோர் ஒன்று கூடி தமிழ் மாணவர் மன்றத்தை சார்ந்த (காங்கிரஸ் சார்புடையது) திரு.எம்.என்.இரவிச்சந்திரன் அவர்களை தலைவராக தேர்ந்தெடுத்தார்கள். அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு சிவகங்கை இராஜேந்திரன் உயரிழந்தார்.

ஆட்சியாளர்களின் அடக்குமுறையினையும் தமிழகம் தழுவிய வன்முறை வெறியாட்டங்களையும் கண்டு அண்ணா பெரிதும் வருத்தமுற்று போராட்டங்களை கைவிடுமாறு மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்தி திணிப்பிற்கு எதிரான போராட்டம் தற்காலிகமாக மாணவர்களால் கைவிடப்பட்டது.

இருமொழிக் கொள்கை

இந்தியை எதிர்த்துக் கொண்டிருப்பது இந்தி நம் அறிவுத் தேடலுக்கோ, அறிவியல் கல்விக்கோ உகந்த மொழி அல்ல என்பதை அனைத்து தமிழர்களும் சந்தேகத்திற்கு இடமின்றி உணர்வதற்குத்தானே அன்றி வேறல்ல. இந்தி நமது வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் பயனற்றது என்பதால், மும்மொழி கொள்கையை (இந்தி திணிப்பு) எதிர்க்கிறோம் என்றார் அண்ணா.

1967ம் ஆண்டு தமிழக முதல்வராக அண்ணா அவர்கள் பதவி ஏற்றார். 23.1.1968ல் தமிழக சட்டமன்றத்தால் தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழி பாடத் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து இந்தி மொழியை அறவே நீக்கிட தீர்மானம் நிறைவேற்றினார்.

தமிழும் மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும். அதுவரை ஆங்கிலமே ஆட்சி மொழியாக தொடரவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அண்ணாவின் அரசு நிறைவேற்றிய இருமொழிக் கொள்கை அகில இந்திய அளவில் அதிர்ச்சி அலைகளை ஏற்ப்படுத்தியது. அதன் மீது அண்ணா அவர்கள் ஒரு முறைதான் உயிர் போகும், இரு முறை போகாது, அதிலும் இந்தக் காரியத்திற்காக நம்முடைய உயிர் போவதனால் நல்ல காரியத்திற்கு நம்முடைய உயிர் போகிறது என்று நிச்சயம் மகிழ்ச்சியடைவோம் என்று முழங்கினார். மேலும் அரசியல் சட்டத்திற்கு முரணாக மும்மொழி திட்டத்தை வேண்டாம் என கூறியதால் ஆட்சியை கலைத்தாலும் கவலைப்பட மாட்டேன் மகிழ்ச்சி கொள்வேன் என்றார் அண்ணா. ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழ், இந்தி, ஆங்கிலம் வழக்கத்தில் உள்ளது. தமிழக அரசு தமிழ் மற்றும் ஆங்கிலத்தை மட்டும் அரசு நிர்வாகத்தில் செயல்பாட்டிற்கு கொண்டுவந்தது

முடிவுரை

1938ஆம் ஆண்டு முதல் இதுகாறும் நடைபெற்ற போராட்டங்கள் எதிர்பார்த்த வெற்றியை முழுதாகத் தராவிட்டாலும் தமிழ் மக்கள் சிந்திய இரத்தம், கொடுத்த உயிர்ப்பலி வீணாகிவிடவில்லை.

1. இந்தி பேசாத மக்கள் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கமாட்டார்கள் என்பது உணர்த்தப்பட்டது.

2. ஆங்கிலமே மத்திய அரசின் ஆட்சி மொழியாக நீடிக்க உத்தரவாதம் கிடைத்தது.

3. மத்திய அரசு பணிகளுக்கு தேர்வுகள் மாநில மொழிகளில் எழுத அனுமதிக்கப்பட்டது.

4. தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை அமுலில் இருந்து வருகிறது.

5. அறிஞர் அண்ணா அவர்கள், இந்தி ஆதிக்கத்திற்காக இந்திக்காரர்கள் பத்துப் பிணங்களை ஒரு பாதையில் போடுவார்களானால் தமிழர்களுடைய பிணம் பத்துக்குப் பத்து, நூறு பிணங்கள் தமிழ் நாட்டில் தமிழுக்காக விழும் என்று நாம் எடுத்துக்காட்ட வேண்டும், அப்படிப்பட்ட உள்ள உறுதி இருந்தாலன்றி இந்தப் பிரச்சினையிலே வெற்றி பெறுவது என்பது முடியாத காரியம் என்று சொன்னதை நினைவில் கொள்ள வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலை அலகில் இரு பொறியாளர்களின் இடைநீக்க ஆணைகளையும் உடனடியாகத் திரும்பப் பெற்று, அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, 07.10.2026 அன்று மாநிலம் தழுவிய அளவில் அனைத்துப் பொறியாளர்களும் கறுப்புப் பட்டை அணிந்து தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்



தேசிய நெடுஞ்சாலை அலகில் இரு பொறியாளர்களின் இடைநீக்க ஆணைகளையும் உடனடியாகத் திரும்பப் பெற்று, அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, 07.10.2026 அன்று மாநிலம் தழுவிய அளவில் அனைத்துப் பொறியாளர்களும் கறுப்புப் பட்டை அணிந்து தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

தேசிய நெடுஞ்சாலை அலகில் இரு பொறியாளர்களின் இடைநீக்க ஆணைகளையும் உடனடியாகத் திரும்பப் பெற்று, அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும் என்பதை வலியுறுத்தி, 07.10.2026 அன்று மாநிலம் தழுவிய அளவில் அனைத்துப் பொறியாளர்களும் கறுப்புப் பட்டை அணிந்து தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்

RNI No. 49572/90

Registration No. TN/CC (S) DN/597/23-25
Licensed to post without prepayment under WPP No.TN/PMG/(CCR)WPP146 / 23 – 25
Date of Publication: First Week of Every Month
Posted at PathrikaChennel, Egmore, Chennai - 600 008
Posted between 7th - 13th Everymonth Despatch Date : 17.10.2026

கண்காணிப்புப் பொறியாளராகப் பதவி உயர்வு பெற்ற சங்கத்தின் **முன்னாள் பொருளாளர் முனைவர் சோ.இராமலிங்கம்** அவர்களைச் சங்க நிருவாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்

கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 24.09.2026 அன்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் போது முதன்மை இயக்குநர் அவர்களைச் சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்

Published by: Er.A.Venkatachalam, M.E., Former President, ATNHE, on behalf of the Association of Tamilnadu Highways Engineers; 35V, Taluk Office Road, Saidapet, Chennai-600 015
Printed by: S.S.Graphics, 54/2, Mohammed Hussain Street, Royapettah, Chennai-600 014
Editor: Er.R.Deepak, M.E., Former General Secretary, ATNHE